**ஐக்கிய அமெரிக்க தூதரகம்**
**கொழும்பு**
**ஊடக அறிக்கை**

பொது அலுவல்கள் பிரிவு
தொ.பே: +94 (11) 249-8100 ● பெக்ஸ்: +94 (11) 244-9070
ஈமெயில்: VanHornNT@state.gov ● http://lk.usembassy.gov

ஊடக அறிக்கை இலக்கம்: 20210128

**சிறு வணிகங்களுக்கு உதவுவதற்கும் இலங்கை பெண்களை வலுவூட்டுவதற்கும் 40 மில்லியன் அமெரிக்க டொலர் கடனுதவிக்கு அமெரிக்க அரசாங்கம் ஒப்புதல்**

**கொழும்பு, ஜனவரி 28, 2021:** சிறு மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கும் பெண் தொழில்முனைவோருக்கும் உதவுவதற்காக இலங்கையின் சனச அபிவிருத்தி வங்கிக்கு 40 மில்லியன் அமெரிக்க டொலர் கடனுதவியை அமெரிக்க அரசாங்கம் அங்கீகரித்துள்ளது. அமெரிக்க அரசாங்கத்தின் அபிவிருத்தி வங்கியான அமெரிக்க சர்வதேச அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்திடம் (U.S. International Development Finance Corporation - DFC) இருந்தான இந்த கடனுதவியானது இலங்கையில் தனியார்துறை முதலீடு மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கு உதவுவதை நோக்காகக் கொண்டுள்ளது. இந்தோ-பசுபிக் பிராந்தியத்தில் இருப்பவை உள்ளிட்ட அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகள் எதிர்கொள்ளும் மிக முக்கியமான சவால்களுக்கான தீர்வுகளுக்கு நிதியளிப்பதற்கு DFC தனியார்துறையுடன் கூட்டுச் சேர்கிறது.

2019 ஆம் ஆண்டு DFC ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் இலங்கையிலான அதன் முதலாவது முதலீட்டை இந்த கடனுதவி பிரதிநிதித்துவப்படுத்துகிறது. DFC ஆனது, தனியார் மூலதனத்தை அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளுக்கு சிறப்பாகக் கொண்டு வர புதிய மற்றும் புதுமையான நிதியியல் கருவிகளை அறிமுகப்படுத்தும் அதேநேரம், முன்னாள் வெளிநாட்டு தனியார் முதலீட்டு கூட்டுத்தாபனத்தினதும் (Overseas Private Investment Corporation - OPIC) சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க முகவரமைப்பின் அபிவிருத்தி கடன் அதிகாரசபையினதும் (USAID's Development Credit Authority) ஆற்றல்களை ஒன்றிணைத்து கொண்டுவரும் நவீனமயமாக்கப்பட்ட, ஒருங்கிணைந்த முகவரமைப்பொன்றாகும்.

இலங்கை முழுவதிலுமுள்ள சிறு மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கு ஒவ்வொன்றும் 5 மில்லியன் தொடக்கம் 10 மில்லியன் ரூபா வரையிலான அளவுகளைக் கொண்ட சுமார் 1,450 கடனுதவிகளை வழங்க இந்த 40 மில்லியன் அமெரிக்க டொலரை சனச அபிவிருத்தி வங்கி பயன்படுத்தும். DFC இன் 2X Women's Initiative எனும் முன்னெடுப்புக்கு ஆதரவாக அந்த கடன்களில் குறைந்தப்பட்சம் 40 சதவீதமானவை பெண்களுக்கு சொந்தமான, பெண்கள் தலைமை வகிக்கும், அல்லது பெண்களை வலுவூட்டும் உற்பத்தி அல்லது சேவையை வழங்கும் வணிகங்களுக்கு வழங்கப்படும். இந்த உதவியானது தொற்றுநோய் பரவலுக்கு பின்னரான இலங்கையின் பொருளாதார மீட்சிக்கு ஊக்கமளிக்கும் என்பதுடன், அமெரிக்கா மற்றும் இலங்கை ஆகிய இரு நாடுகளினதும் முக்கிய அபிவிருத்தி இலக்கொன்றாக நூற்றுக்கணக்கான உள்ளூர் பெண்களையும் வலுவூட்டும்.

“தமது பொருளாதாரங்களில் வலுவான பெண் பங்களிப்பை ஊக்குவிக்கும் நாடுகள் வெறும் சமூகங்களுக்கு மேலானவை என்பது மட்டுமல்லாது, அவை மிகவும் வளமான சமூகங்கள். இந்த முன்னெடுப்பானது நாடு முழுவதுமுள்ள பெண் தொழில்முனைவோரின் அபிலாஷைகளை ஊக்குவித்து ஆதரிக்கும்,’’ என்று இலங்கை மற்றும் மாலைத்தீவுக்கான அமெரிக்க தூதுவர் அலெய்னா பி. டெப்லிட்ஸ் தெரிவித்தார்.

உலகெங்கிலும் உள்ள பெண்கள் அவர்களது திறனை அடைய உதவுவதில் அமெரிக்கா உறுதிப்பாட்டுடன் இருக்கிறது. 2020 ஆம் ஆண்டில் மட்டும், பெண்களின் பொருளாதார வலுவூட்டலை நோக்காகக் கொண்ட தனியார் துறை முதலீட்டில் 7 பில்லியன் அமெரிக்க டொலரை திரட்டுவதற்கு DFC இன் 2X முன்னெடுப்பு உதவியுள்ளது.

“இந்த பிராந்தியத்தில் அமெரிக்காவின் முக்கியமான பங்காளியான இலங்கையில் சிறு வர்த்தகங்களுக்கும் பெண் தொழில்முனைவோருக்குமான வாய்ப்பை அதிகரிக்கும் நிதியளிப்பை வழங்குவதில் நாம் பெருமைபடுகிறோம்,’’ என்று DFC இன் பிரதம நிறைவேற்று அதிகாரி தேவ் ஜகதேசன் தெரிவித்தார். “எமது முதலீடுகள் இலங்கை மக்களுக்கு பயனளிக்கும் வகையில் அபிவிருத்தி மற்றும் பொருளாதார வளர்ச்சியை அதிரிப்பதை நோக்காகக் கொண்டுள்ளன,’’ என்றும் அவர் குறிப்பிட்டார்.